வணக்கம் நண்பர்களே...

இந்தப் பகுதி முற்றிலும் பதினொறாவது தமிழ் சமச்சீர் புத்தகம் உரைநடை பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும்.

விடைகளும் ஒவ்வொரு பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில வினாக்கள் மட்டும் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

பதினொறாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள உரைநடைப் பகுதிகள்:

1) கல்வியே அழியாச் செல்வம்
2) வீரச்சுவை
3) காளத்தி வேடனும் கங்கை வேடனும்
4) குடிமக்கள் காப்பியம்
5) ஓய்வு
6) சமயங்களின் பொது நீதி
7) கல்வெட்டுகள்
8) தமிழக மகளிர்

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

## பதினொறாம் வகுப்பு தமிழ் - உரைநடை

### 1) கல்வியே அழியாச் செல்வம்

1) நமது மனதில் கீழ்க்கண்டவற்றில் எந்த ஆசையை பெறவேண்டும் என்று இயற்கையாகவே வேரூன்றி நிற்கின்றது எது மறைமலையடிகள் கூறுகிறார்?

A] அழியாக் கல்வி

B] அழியாச் செல்வம்

C] அழியா வீரம்

D] அழியா எண்ணம்

2) நாம் எல்லோரும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டு காலத்தை கழித்து வருகிறோம் என்பதை மறைமலையடிகள் கூறிய ஊதாரணங்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] முத்துச்சிப்பியில் உள்ள முத்தின் ஒளி

B] பாசி மூடிய பவளத்தின் நிறம்

C] சூரிய ஒளி கண்டு உறைந்த பனித்துளி

D] மாசியில் மறைந்த மதியின் துலக்கம்

3) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது மேற்கு திசையில் உள்ள சிறந்த நகரமாகிய மெசினாப் பட்டினமானது நில அதிரிச்சியினால் அழிந்து நீருக்கும் நெருப்புக்கும் இரையானது?

A] 1907

B] 1906

C] 1909

D] 1908

4) தெய்வச் சிதம்பரத் தேவாஉன் சித்தந் திரும்பி விட்டாற் - என்ற பாடலை பாடியவர் யார்?

A] பட்டினத்துப் பிள்ளை

B] திருஞானசம்பந்தர்

C] திருநாவுக்கரசர்

D] மாணிக்கவாசகர்

5) மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் - என்ற பாடல் மூலம் கல்வியின் சிறப்பை கூறியவர் யார்?

A] திருவள்ளுவர்

B] ஔவையார்

C] கம்பர்

D] கபிலர்

6) மக்கள், விலங்குகளை விட உயர்ந்தவர்கள் என கீழ்க்கண்ட எந்த காரணத்தினால் கூறப்படுகிறது?

A] உணவை தேடுதல்

B] உறங்கல் தொழில்

C] அறிய பலநூல்கள் கற்றல்

D] இன்புறுதல்

7) இந்த உலகத்தில் கல்வி அறிவு உடையவர்களே கண்ணுடையவர்கள் என்றும்

மற்றவர்கள் எல்லாம் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்கள் என்று கூறியவர் யார்?

A] வள்ளுவனார்

B] வள்ளலார்

C] பாரதிதாசன்

D] ஔவையார்

8) முற்காலத்தில் கல்வியில் சிறந்த பெண்மணிகளில் கீழ்க்கண்டவற்றில் யார் தவறானவர்கள்?

A] ஔவையார்

B] அமராவதி

C] பெருந்தேவியார்

D] காரைக்காலம்மையார்

9) 'பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்' - என்று யார் பாடியபாடல் மூலம் முற்காலத்தில் இருந்த பெண்மக்கள் எல்லாருங் கல்வியில் வல்லவர்களாய் இருந்தார்கள் என்பதை விளக்குகிறது?

A] ஔவையார்

B] காரைக்காலம்மையார்

C] கம்பர்

D] ஒட்டக்கூத்தர்

10) வெள்ளத்தால் அழியாது வெந் தழலால் வேகாது - எனத் தொடங்கும் பாடல் மூலம் கல்வியின் சிறப்பைக் கூறும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

A] திருக்குறள்

B] புறநானூறு

C] பதிற்றுப்பத்து

D] விவேகசிந்தாமணி

11) மறைமலையடிகள் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலில் 'கல்வியே அழியாச் செல்வம்' - என்ற தலைப்பில் உரைநடை எழுதி கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார்?

A] அறிவுரைக் கொத்து

B] அறிவுரைக் கோவை

C] உரைமணிக் கோவை

D] தமிழர் மதம்

12) இந்த உலகில் கீழ்க்கண்ட யாருக்கு மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டியதற்காக கல்வியறிவு மிகவும் தேவை என்று மறைமலையடிகள் கூறுகிறார்?

A] ஆண்கள்

B] ஆசிரியர்கள்

C] குழந்தைகள்

D] பெண்கள்

விடைகள் - கல்வியே அழியாச் செல்வம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | D | 4 | A | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | B | 9 | C | 10 | D |
| 11 | A | 12 | D | | | | | | |

## 2) வீரச்சுவை

1) ரஸம் - என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த மொழிச் சொல்?

A] தமிழ்ச் சொல்

B] வடச் சொல்

C] பிரெஞ்சு சொல்

D] இலத்தீன் சொல்

2) நாவினால் நுகரப்படும் சுவை எத்தனை வகைப்படும்?

A] நான்கு வகை

B] ஐந்து வகை

C] ஆறு வகை

D] எட்டு வகை

3) சொற்சுவைகள் எத்தனை வகைப்படும்?

A] இரண்டு வகை

B] மூன்று வகை

C] நான்கு வகை

D] ஒரு வகை

4) பொருட்சுவைகள் எத்தனை வகைப்படும்?

A] ஏழு வகை

B] ஆறு வகை

C] எட்டு வகை

D] ஒன்பது வகை

5) செவியால் நுகரப்படும் சுவை எத்தனை வகைப்படும்?

A] ஒன்பது வகை

B] பதினொரு வகை

C] பத்து வகை

D] பன்னிரண்டு வகை

6) கீழ்க்கண்ட எந்த சுவையானது உள்ளத்தே எப்பொழுதும் நிலைபெற்று இன்பம் பயக்கும் என்று கவிஞர் கூறுகிறார்?

A] நாவினால் நுகரப்படும் சுவை

B] பொருட்களினால் ஏற்படும் சுவை

C] செவியால் நுகரப்படும் சுவை

D] சொல்லால் ஏற்படும் சுவை

7) பொருட்சுவையானது செவியால் மட்டும் இன்றி கீழ்க்கண்ட எந்த உறுப்பின் வாயிலாகவும் நிகழாநிற்கும் என்று கூறப்படுகிறது?

A] கண்

B] மனம்

C] நாக்கு

D] மூக்கு

8) நாடக அரங்கில் ஒருவன் பித்தனாக நடிக்கும் போதும் அவனது நடிப்புச் சொற்களைக் கேட்கும் போதும் கீழ்க்கண்ட எந்த பொருட்சுவை நிகழும் என்று கவிஞர் கூறுகிறார்?

A] அவலம்

B] வெகுளி

C] வியப்பு

D] நகை

9) செவியால் உணரப்படும் சுவையானது திட்பமுற உணரும் நுட்பவுணர்வுடையார்க்கன்றி ஏனையோர்க்கு அந்த சுவைகள் உணர்தற்கரியன என்று கூறியவர் யார்?

A] தொல்காப்பியர்

B] கம்பர்

C] மறோக்கத்து நப்பல்சையார்

D] வீரமாமுனிவர்

10) ஒன்பது பொருட்சுவைகளில் சமனிலை என்னும் சுவையின் பொருள் யாது?

A] சந்தம்

B] சாந்தம்

C] பந்தம்

D] நிகரானது

11) கீழ்க்கண்ட பொருட்சுவைகளில் ஐம்பொறியும் அடங்கப்பெற்றுப் பிறர்வையினும் வாழ்த்தினும் வாளாற்போழியினும் தாளில் வணங்கினும் மனந்தறியாது அவற்றைச் சமமாக கொண்டு நிற்கும் நிலைமை கொண்ட சுவை எது?

A] நகை

B] வெகுளி

C] சமனிலை

D] உவகை

12) ஒன்பது பொருட்சுவைகளில் காப்பியங்களில் பயின்று வராத ஒரே ஒரு சுவை எது?

A] வியப்பு

B] அவலம்

C] அச்சம்

D] சமனிலை

13) சுவை என்பதன் வேறு பெயர் யாது?

A] சாந்தம்

B] மணமானது

C] மெய்ப்பாடு

D] நடுநிலை

14) மெய்ப்பாடு என்பது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப்

புலப்படுவதோராற்றால் வெளிப்படுதல் - என்று கூறியவர் யார்?

A] தொல்காப்பியனார்

B] பேராசிரியர்

C] இறையனார்

D] இலக்குவனார்

15) ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கீழ்க்கண்ட எந்த நூலில் மெய்ப்பாடு செய்யுளுறுப்புக்களுள் ஒன்றாக குறிக்கப்படுவதோடு, தனியாக ஓர் இயல் விரித்துரைக்கப் பெற்று உள்ளது?

A] தொல்காப்பியம்

B] சங்க இலக்கியம்

C] பேரிலக்கிய நூல்கள்

D] சிற்றிலக்கிய நூல்கள்

16) தொல்காப்பியர் ஒவ்வொரு சுவையும் தோன்றுவதற்கு மூலமான பொருள்களாக எத்தனை பொருள்களை கூறுகிறார்?

A] இரண்டு

B] நான்கு

C] ஆறு

D] ஒன்பது

17) தொல்காப்பியர் அவர்கள் வீரம் என்ற சொல்லை கீழ்க்கண்ட எந்த சொல்லால் குறிப்பிடுகிறார்?

A] சாந்தம்

B] மெய்ப்பாடு

C] பெருமிதம்

D] நடுகல்

18) கல்வி, தறுகண், இசை, கொடை என்ற நான்கும் பற்றி கீழ்க்கண்ட எந்த சுவை பிறக்கும் என்று தொல்காப்பியனார் கூறுகிறார்?

A] அவலம்

B] இழிப்பு

C] நகை

D] பெருமிதம்

19) மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி - எனத் தொடங்கும் பாடல் மூலம் தன் போர்வீரர்களுக்கு வீரத்தை ஊட்டிய மன்னன் யார்?

A] நலங்கிள்ளி

B] பாரி

C] நெடுங்கிள்ளி

D] அதியமான்

20) போர் தொடங்குமுன் போர் வீரர்களுக்கு நலங்கிள்ளி மன்னன் வீரஉரை வழங்கிய ‘மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி’ - என்ற பாடலானது இடம்பெற்றுள்ள நூல் எது?

A] அகநானூறு

B] புறநானூறு

C] பரிபாடல்

D] கலித்தொகை

21) கீழ்க்கண்டவற்றில் ஒரு காலத்தில் பாரி என்னும் வள்ளலை பறம்பு அரண்மனையில் முற்றுகையிடாதவர் யார்?

A] சேரர்

B] சோழர்

C] பல்லவர்

D] பாண்டியர்

22) பறம்பு நாடானது மொத்தம் எத்தனை ஊர்களை கொண்டு இருந்ததாக கவிஞர் கூறுகிறார்?

A] இருநூறு

B] ஐந்நூறு

C] நானூறு

D] முந்நூறு

23) பறம்பு நாட்டிலுள்ள முந்நூறு ஊர்களையும் ஏற்கனவே கீழ்க்கண்ட யார் பெற்றதாக கவிஞர் யார்?

A] மருத்துவர்கள்

B] பேரரசர்கள்

C] பரிசிலர்

D] அமைச்சர்கள்

24) பறம்பு நாட்டையும், பாரி வள்ளலின் பெருமையும், அவரின் வீரத்தை பற்றி பறம்பு அரணை முற்றுகையிடத்
தொடங்கியவர்களிடம் கூறிய புலவர் யார்?

A] பரணர்

B] கபிலர்

C] கம்பர்

D] ஒட்டக்கூத்தர்

25) கீழ்க்கண்ட எந்த இரண்டும் தமிழரின் தலை சிறந்த பண்பு என கூறப்படுகிறது?

A] காதல், வீரம்

B] கல்வி, செல்வம்

C] செல்வம், காதல்

D] வீரம், செல்வம்

26) பகைவரை வெகுண்டு நோக்கிய கண் அவர் வேல்கொண்டு எறியுமிடத்து இமைத்து விடுமாயினும் வீரருக்கு அதுவே தோல்வி - என்று வீரத்தின் சிறப்பைக் கூறியவர் யார்?

A] கபிலர்

B] வள்ளுவர்

C] தொல்காப்பியர்

D] இறையனார்

27) சோழன் கரிகாலனோடு போர் புரிந்த போது தன் மாரிபிலே தைத்து உருவின புண்ணும் புறப்புண்ணாகும் என நாணி வாளோடு வடக்கிருந்து உயிர் நீத்த மன்னன் யார்?

A] செங்குட்டுவன்

B] முதலாம் மகேந்திரவர்மன்

C] பெருஞ்சேரலாதன்

D] நெடுஞ்செழியன்

28) பெருஞ்சேரலாதன் என்ற மன்னன் கீழ்க்கண்ட எந்த நாட்டைச் சேர்ந்த மன்னன் ஆவான்?

A] சோழன்

B] பாண்டியன்

C] பல்லவன்

D] சேரன்

29) சோழன் கரிகால மன்னனுக்கும் சேர மன்னம் பெருஞ்சேரலாதனுக்கு கீழ்க்கண்ட எந்த இடத்தில் போர் நடைபெற்றது?

A] வெண்ணிப் பறந்தலை

B] திருச்சி மலைக்கோட்டை

C] வெண்ணிப்போர்

D] வந்தவாசி

30) ‘என் மகன் போரிற் புறங்காட்டியதும் உண்மையாயின் அவன் பாலுண்ட என் அங்கத்தைச் சிதைத்திடுவேன் என்று போர்க்களம் அடைந்ததும், மற்றொரு வீரமகள் முதல் இரு நாள்கள் போரிலும் தன் கணவன், தமயனையும் இறந்த பிறகும் அடுத்த நாள் தன் மகனை போருக்கு அனுப்பிய செய்தியும் ஆகிய இரு செய்திகள் கீழ்க்கண்ட எந்த நூலில் கூறப்பட்டுள்ளன?

A] குறுந்தொகை

B] புறநானூறு

C] கலித்தொகை

D] பரிபாடல்

31) பகைவர்மேற் செய்யும் வன்கண்மையை கீழ்க்கண்டவற்றில் எவ்வாறு அழைப்பர்?

A] பொருளாண்மை

B] திறன்மின்மை

C] பேராண்மை

D] கொடைத்தன்மை

32) ஒருவர்க்கு ஒரு தாழ்வு வந்தாயின் அது தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டுக் கண்ணோட்டமுடன் உதவி செய்தலை அவ்வாண்மைக்கு கூர்மை என்று கூறியவர் யார்?

A] வள்ளலார்

B] பேராசிரியர்

C] தொல்காப்பியார்

D] வள்ளுவனார்

33) அறத்தி னாலன்றி அமரர்க்கும் அரும்பகை கடத்தல் - என்ற பாடலை பாடிய புலவர் யார்?

A] கம்பர்

B] பரணர்

C] இளங்கோவடிகள்

D] சீத்தலைச்சாத்தனார்

34) கண்ணகிக்கு சிலை கொணர்தற்பொருட்டு வஞ்சிப்பூவை சூடி வடதிசைக்குப் புறப்பட்ட மன்னன் யார்?

A] செங்கோடன்

B] செங்குட்டுவன்

C] இராஜாராஜன்

D] கரிகால மன்னன்

35) கண்ணகிக்கு சிலை எடுக்க புறப்படுவதற்கு முன் 'கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்' - எனத் தொடங்கும் பாடல் மூலம் வீரர்களுக்கு வீரஉரை நிகழ்த்தியவர் யார்?

A] செங்குட்டுவன்

B] நெடுஞ்செழியன்

C] வில்லவன் கோதை

D] ஆதித்த சோழன்

36) வில்லவன் கோதை என்பவர் சேர மன்னன் செங்குட்டுவன் அவையில் கீழ்க்கண்ட எந்த பதவியை வகித்து வந்தார்?

A] நிமித்திரிகர்

B] கணிகர்

C] அரசவைக் கவிஞர்

D] அமைச்சர்

37) 'கேளிது நீயுங் காணக் கிளர்ந்தகோ ளரியின் கேழில்' - என்று இரணியன் பிரகாலதை பார்த்து கூறியதாக கூறும் இப்பாடலை இயற்றியவர் யார்?

A] கபிலர்

B] கம்பர்

C] செங்கண்ணார்

D] இடைக்காடனார்

38) இராமனது சேவையில் அமர்புரிந்து இறக்கவும் ஒருப்படாதத் தனது குறையை நினைந்து வருந்தியவன் யார்?

A] விபிஷ்ணன்

B] பரதன்

C] சுக்ரீவன்

D] இராவணன்

39) தமிழரின் படைமாட்சி பற்றியும் போர் நெறிகளையும் விளக்கும் நூல் எது?

A] தொல்காப்பியம்

B] நாலடியார்

C] பத்துப்பாட்டு

D] திருக்குறள்

40) குண, அலங்காரம் ஆகிய இரசுவைகளும் கீழ்க்கண்ட எந்த சுவைவகையைச் சார்ந்தது?

A] சொல்லால் நுகரப்படும் சுவை

B] பொருளாள் நுகரப்படும் சுவை

C] நாவினால் நுகரப்படும் சுவை

D] செவியால் நுகரப்படும் சுவை

## விடைகள் - வீரச்சுவை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 9 | A | 17 | C | 25 | A | 33 | A |
| 2 | C | 10 | B | 18 | D | 26 | B | 34 | B |
| 3 | A | 11 | C | 19 | A | 27 | C | 35 | C |
| 4 | D | 12 | D | 20 | B | 28 | D | 36 | D |
| 5 | B | 13 | C | 21 | C | 29 | A | 37 | B |
| 6 | C | 14 | B | 22 | D | 30 | B | 38 | C |
| 7 | A | 15 | A | 23 | C | 31 | C | 39 | D |
| 8 | D | 16 | B | 24 | B | 32 | D | 40 | A |

## 3) காளத்திவேடனும் கங்கைவேடனும்

1) தமிழ்நாட்டு காளத்தி மலையிலே பிறந்த காளத்தி வேடனின் பெயர் யாது?

A] கண்ணப்பன்

B] குகன்

C] பரதன்

D] கண்ணன்

2) வடநாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்த கங்கை வேடனின் பெயர் யாது?

A] கண்ணப்பர்

B] குகன்

C] அருகன்

D] சிவன்

3) கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் - எனத் தொடங்கும் பாடல் மூலம் கண்ணப்பனது பெருமை பாடியவர் யார்?

A] குலசேகரயாழ்வார்

B] சேரமான் பெருமாள் நாயனார்

C] மாணிக்கவாசகர்

D] சேக்கிழார்

4) வண்டை நோக்கிப் பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்ற அன்பின் திறத்தினை விளக்கி பாடியவர் யார்?

A] நாவுக்கரசர்

B] சேக்கிழார்

C] சுந்தரர்

D] மாணிக்கவாசகர்

5) கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை - என்ற பாடல் மூலம் கண்ணப்பரது பெருமை மாணிக்கவாசகர் கீழ்க்கண்ட எந்த நூலில் பாடியுள்ளார்?

A] திருவாசகம்

B] திருக்கோவை

C] திருமந்திரம்

D] திருவருட்பா

6) காளத்தி வேடன் கண்ணப்பனது பெருமையை மாணிக்கவாசகர் திருவாசக நூலில் கீழ்க்கண்ட எந்த பதிகத்தில் பாடியுள்ளார்?

A] திருச்சதகம்

B] திருக்கோத்தும்பி

C] திருப்பொற்சுண்ணம்

D] திருவெம்பாவை

7) கீழ்க்கண்ட எந்த இரு நூல்களில் கண்ணப்பனது பெருமை பேசப்படுவதால் சைவ சமயத்தை நிலை நிறுத்திய நால்வருக்கும் முந்தியவன் என்பது நன்கு விளங்குகின்றது?

A] திருமந்திரம், திருவாசகம்

B] தேவாரம், பெருமாள் திருமொழி

C] திருவாசகம், தேவாரம்

D] திருக்கோவை, திருவாசகம்

8) காளத்தி நாதனை வணங்கிய திருஞானசம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார் போல் வேடர் பெருமானாகிய கண்ணப்பனைக் கை தொழுதாரென்று என்று அழகாக எழுதிப் பாடியவர் யார்?

A] மாணிக்கவாசகர்

B] சுந்தரர்

C] பரஞ்சோதி முனிவர்

D] சேக்கிழார்

9) கீழ்க்கண்ட எந்த புலவர் குகன் இராமனைக் காணப் புறப்படும் கோலமானது ஓர் அரசன் மற்றோர் அரசனைக் காண செல்வது போல் தன் கவிதையில் எழுதியுள்ளார்?

A] வால்மீகி

B] கம்பர்

C] அடியார்க்கு நல்லார்

D] உருத்திரசன்மார்

10) குகன் இராமனைக் காணப் புறப்படும் கோலமானது ஓர் அரசன் ஆண்டவனைக் காண செல்வது போல் தன் கவிதைநூலில் எழுதிய புலவர் யார்?

A] வால்மீகி

B] கம்பர்

C] அரும்பத உரைகாரர்

D] அடியார்க்கு நல்லார்

11) குகன் இராமனை பார்க்க சென்ற போது கீழ்க்கண்ட எந்த பொருள்களை தன்னுடன் எடுத்துக் கொண்டு சென்றார்?

A] கனிகளும், காய்களும்

B] இறைசியும், தேனும்

C] தேனும், மீனும்

D] பாலும், தேனும்

12) அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல் - என்ற வரிகள் மூலம் இராமன் கீழ்க்கண்ட யாரை குறிப்பிடுகிறார்?

A] இலக்குவணன்

B] மாதவர்

C] சீதை

D] குகன்

13) காளத்திநாதனை கீழ்க்கண்ட எந்த வேதியர் முறைப்படி பூசை செய்து வந்தார்?

A] சிவகோசரியார்

B] சிவகோச்சாரியார்

C] பட்டினத்தடிகள்

D] சிவனடியார்

14) 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்' - எனத் தொடங்கும் பாடல் மூலம் கண்ணப்பரது பெருமையை கூறியவர் யார்?

A] மாணிக்கவாசகர்

B] சேக்கிழார்

C] பரஞ்சோதி முனிவர்

D] திருமூலர்

15) முற்றத் துறந்தவர் என்று தமிழகம் போற்றிப் புகழ்பவர் யார்?

A] இளங்கோவடிகள்

B] நாமக்கல் கவிஞர்

C] பட்டினத்துப்பிள்ளை

D] இராமலிங்கனார்

16) 'வாளால் மகவரிந்து ஊட்டவல்ல லேனல்லேன் மாது சொன்ன' - எனத் தொடங்கும் பாடல் மூலம் பட்டினத்தடிகள் கீழ்க்கண்ட யாருடைய பெருமையை கூறுகிறார்?

A] குகன்

B] சிவபெருமானை

C] சிறு தொண்டர்

D] கண்ணப்பர்

17) அந்தோ! காட்டில் வாழும் கழுகின் வேந்தனும், நாட்டில் வாழும் நல் வேடனும் காட்டிய அன்பை நான் காட்ட இயலாதவ நாயினேன் - என்று இராமனிடம் கூறியவர் யார்?

A] சுக்ரீவன்

B] குகன்

C] அனுமன்

D] பரதன்

18) சீதையை இராவணன் கடித்தி சென்றதை இராமனிடம் முதன் முதலில் கூறியவர் யார்?

A] அனுமன்

B] சடாயு

C] சுக்ரீவன்

D] பறவைகள்

19) கானகத்தில் இருந்த தையலை இலங்கை வேந்தன் வஞ்சனையாற் கவர்ந்து மனோ வேகமாகச் செல்லும் பொழுது, ஆதரவற்று அரற்றிய மங்கையின் அழுகுரல் கேட்டு காற்றினுங் கடுகி வந்த காவலன் யார்?

A] இலட்சுமணன்

B] கழுகின் தலைவன்

C] சடாயு

D] அனுமன்

20) 'தன்னுயிர் புகழ்க்கு விற்றசடாயு' - என்ற சடாயுவெள புகழ்ந்துரைத்தவர் யார்?

A] சுக்ரீவன்

B] இலட்சுமணன்

C] விபிஷ்ணன்

D] அனுமன்

21) வேழ நெடும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ - என்ற வரியில் கீழ்க்கண்ட யாருடைய படையைக் குகன் குறிப்பிடுகிறான்?

A] பரதன் படை

B] இராவணன் படை

C] சுக்ரீவன் படை

D] இராமன் படை

22) ஆழநெ டுந்திரை யாறுக டந்திவர் போவாரோ - என்ற வரி மூலம் குகன் வேடன் கீழ்க்கண்ட யாருக்கு தடையாக நின்றான்?

A] இராமன்

B] பரதன்

C] எதிரி மன்னர்கள்

D] அந்தணர்கள்

23) கடந்தோர்க்கும் கடத்தலரிதாய மக்கட் பாசம் நீத்த ஒரு தொண்டர் கீழ்க்கண்டவற்றில் யார்?

A] திருநீலகண்டர்

B] இயற்பகை நாயனார்

C] பரஞ்சோதி முனிவர்

D] திருநாவுக்கரசர்

24) மனையாள் மீது பாசம் துறந்த சிவதொண்டர் கீழ்க்கண்டவற்றில் யார்?

A] இயற்பகை நாயனார்

B] திருஞானசம்பந்தர்

C] பரஞ்சோதி முனிவர்

D] திருநீலகண்ட தொண்டர்

25) கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றறிந்ததும், ஈசன்பால் வைத்த அன்பினால், இரு கண்களையும் ஈத்தளிக்க இசைந்த சிவதொண்டர் யார்?

A] திருநீலகண்டர்

B] கண்ணப்பர்

C] இயற்பகைநாயனார்

D] சிறுதொண்டர்

26) கீழ்க்கண்டவற்றில் பட்டினத்து அடிகள் போற்றியவர்களில் தவறானவர் யார்?

A] திருநீலகண்டர்

B] கண்ணப்பர்

C] இயற்பகைநாயனார்

D] சிறுதொண்டர்

விடைகள் - காளத்திவேடனும் கங்கைவேடனும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 7 | C | 13 | A | 19 | C | 25 | B |
| 2 | B | 8 | D | 14 | B | 20 | D | 26 | C |
| 3 | C | 9 | A | 15 | C | 21 | A | | |
| 4 | D | 10 | D | 16 | D | 22 | B | | |
| 5 | A | 11 | C | 17 | A | 23 | C | | |
| 6 | B | 12 | D | 18 | B | 24 | D | | |

## 4) குடிமக்கள் காப்பியம்

1) வடமொழியில் ஆதிகாவியம் என்று பகழப்பெறும் காவியம் எது?

A] இராமாயணம்

B] இராமனவதாரம்

C] கம்பராமாயணம்

D] இராமபுராணம்

2) கிரேக்கர்களின் பழங்காப்பியம் என அழைக்கப்படும் நூல் எது?

A] ஒடிஸி

B] இலியட்

C] ஈனிட்

D] வர்ஜிஸ்

3) கிரேக்கர்களின் பழங்காப்பியமான இலியட் என்ற நூலை எழுதியவர் யார்?

A] வர்ஜிஸ்

B] வால்மீகி

C] ஹோமர்

D] ஹெலன்

4) இலிய நாட்டு அரசன் கீழ்க்கண்ட எந்த அரசர் பெருமானின் அழகிய மனைவியான ஹெலன் பெருமாட்டியை சிறை எடுத்தான்?

A] வர்ஜீஸ்

B] பாரிஸ்

C] ஹோமர்

D] மெலனஸ்

5) ஹெலன் பெருமாட்டியை சிறை எடுத்த இலிய நாட்டு அரசன் யார்?

A] பாரிஸ்

B] ஹோமர்

C] ஹெலன்

D] வர்ஜீஸ்

6) இலத்தீன் மொழியின் பழங்காப்பியம் எது?

A] இலியட்

B] ஈனிட்

C] ஒடிஸி

D] பானிஸ்

7) உரோமப் பேரரசினைத் தோற்றுவித்த மன்னர் யார்?

A] ஹெலன்

B] பாரிஸ்

C] ஈனியஸ்

D] வர்ஜிஸ்

8) தமிழிலக்கிய வரலாற்றில் முதல் முதலாக காப்பியம் எனச் சிறப்புறத் தோன்றிய நூல் எது?

A] மகாபாரதம்

B] இராமாயணம்

C] சங்க இலக்கியம்

D] சிலப்பதிகாரம்

9) கோவலன் அவர்கள் சிலப்பதிகார நூலில் கீழ்க்கண்டவற்றில் எவற்றின் ஒன்றாக மீனாட்சி சுந்தரம் பிள்ளை பார்வையில் பார்க்கப்படுகிறான்?

A] குடிமக்கள்

B] வணிகர்கள்

C] மன்னர்கள்

D] புலவர்கள்

10) தெ.போ.மீனாட்சி சுந்தரனார் பார்வையில் மாதவி கீழ்க்கண்ட யாரில் ஒருத்தராக பார்க்கப்படுகிறார்?

A] பெண் புலவர்கள்

B] பரத்தையர்

C] அரசியர்கள்

D] பணிவிடை பெண்கள்

11) மூவரசர் பேராசையால், முப்பெருந் துண்டாய் வெட்டுண்டு கிடக்கும் தமிழன்னை, கீழ்க்கண்ட யாருடைய வாழ்க்கை வழியே ஓர் உருவமாய் உயிர்பெற்று விளங்குகிறாள்?

A] கோவலன்

B] மாதவி

C] கண்ணகி

D] ஆதிரை

12) கீழ்க்கண்டவற்றில் காப்பியச் பெருஞ்சுவைகள் - எனக் கூறப்படும் கூற்றுகளில் தவறானது எது?

A] காதல்

B] அழுகை

C] வீரம்

D] புகழ்

13) மாதவியும் கோவலனும் ஓருயிரும் ஈருடலமாக வாழ்கின்ற காதல் வாழ்வானது சிலப்பதிகாரத்தில் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

A] புகார் காண்டம்

B] மதுரைக் காண்டம்

C] வஞ்சிக் காண்டம்

D] மாந்தர் காண்டம்

14) அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டும் கண்ணகியானவள் கீழ்க்கண்ட எந்த காண்டத்தில் தன் கணவனை இழந்தாள் என்று கூறப்படுகிறது?

A] புகார் காண்டம்

B] மதுரைக் காண்டம்

C] வஞ்சிக் காண்டம்

D] வந்திக் காண்டம்

15) கீழ்க்கண்ட எந்த காண்டத்தில் கண்ணகிக்காக எடுத்த கல்லினை வடவரசர் தலைமீது ஏற்றிவந்த செங்குட்டுவனது வீரத்தை பாடும் காண்டம் எது?

A] புகார் காண்டம்

B] மதுரைக் காண்டம்

C] வஞ்சிக் காண்டம்

D] சேரக் காண்டம்

16) கீழ்க்கண்டவற்றில் யார் துறவறத்தின் முடிமணியாக திகழ்கிறாள் என்று கவிஞர் கூறுகிறார்?

A] கண்ணகி

B] தேவந்தி

C] மணிமேகலை

D] மாதவி

17) திருவள்ளுவர் தனது நூலில் உள்ள எந்த பிரிவில் குடிகளது சிறப்பினை பற்றிக் கூறியுள்ளார்?

A] பொருட்பால்

B] அறத்துப்பால்

C] இன்பத்துப்பால்

D] காமத்துப்பால்

18) திருவள்ளுவர் தனது நூலின் பொருட்பாலில் குடிகளது சிறப்பினை கீழ்க்கண்ட எத்தனை அதிகாரங்களில் கூறியுள்ளார்?

A] முதல் பதிமூன்று அதிகாரங்கள்

B] கடைசி பதிமூன்று அதிகாரங்கள்

C] முதல் பத்து அதிகாரங்கள்

D] கடைசி பத்து அதிகாரங்கள்

19) திருக்குறளின் இரண்டாவது பிரிவான பொருட்பாலின் முடிமணியாக விளங்கும் இயல் எது?

A] அங்கவியல்

B] அரசியல்

C] ஒழிபியல்

D] துறவறவியல்

20) கோவலனுக்கு தவறான தண்டனை அளித்த மன்னன் யார்? கண்ணகியின் எதிரே உயிர் விட்ட மன்னர் யார்?

A] பாண்டியன் நெடுஞ்சேரலாதன்

B] வரகுணப் பாண்டியன்

C] அப்ராஜித்த பாண்டியன்

D] பாண்டிய நெடுஞ்செழியன்

21) ஈனிட் - எனும் இலத்தீன் மொழியின் பழங்காப்பியத்தை பாடியவர் யார்?

A] வர்ஜீஸ்

B] ஷேக்ஸ்பியர்

C] இரசூல் கம்சதேவ்

D] ஹோமர்

22) குடிமக்கள் இலக்கியம் என்ற தலைப்பின் மூலம் சிலப்பதிகார நூலின் பெருமையை உரைநடையாக எழுதியவர் யார்?

A] மீனாட்சி சுந்தரனார் உரைநடை

B] தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் உரைநடை

C] பெரியார் உரைநடை

D] அறிஞர் அண்ணா உரைநடை

விடைகள் - குடிமக்கள் காப்பியம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | B | 11 | C | 16 | D | 21 | A |
| 2 | B | 7 | C | 12 | D | 17 | A | 22 | B |
| 3 | C | 8 | D | 13 | A | 18 | B | | |
| 4 | D | 9 | A | 14 | B | 19 | C | | |
| 5 | A | 10 | B | 15 | C | 20 | D | | |

## 5) ஓய்வு

1) வேலையே இல்லை, நாளெல்லாம் வாளாவிருக்கிறான், ஓய்வு அல்ல அது - அதன் பெயர் எதுவென்று அண்ணா கூறுகிறார்?

A] கொடுமை

B] சோம்பல்

C] சோர்வு

D] ஒய்யாரம்

2) வேலை இருக்கிறது, வேலை செய்யாமல் வாளாவிருக்கிறான், ஓய்வு அல்ல - அதன் பெயர் எதுவென்று அண்ணா கூறுகிறார்?

A] கொடுமை

B] சோம்பல்

C] சோர்வு

D] ஒய்யாரம்

3) வேலை இருக்கிறது வேலை செய்த அலுப்பினால் வேலை நேரம் முடிந்ததும், கட்டைபோலக் கீழே விழுகிறான், தூங்கிவிடுகிறான் - இந்த செயலின் பெயர் எதுவென்று அண்ணா கூறுகிறார்?

A] கொடுமை

B] சோம்பல்

C] சோர்வு

D] ஒய்யாரம்

4) ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை, எப்போதும் சும்மா இருக்கிறான்; இதுவும் ஓய்வு அல்ல - இந்த செயல் எதுவென்று அண்ணா கூறுகிறார்?

A] கொடுமை

B] சோம்பல்

C] சோர்வு

D] ஒய்யாரம்

5) ஓய்வு என்பது உரிமை; செய்தவன், தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையில் ஈடுபடுவதற்கான மாமருந்து என்று கூறியவர் யார்?

A] அறிஞர் அண்ணா

B] ஈ.வெ.ராமசாமி

C] காமராசர்

D] தேசிக விநாயகம் பிள்ளை

6) வேலை செய்த அலுப்புப்போக அவன் தூங்கி எழுந்திருப்பது கீழ்க்கண்ட எதைப் போன்றது என்று அண்ணா கூறுகிறார்?

A] பலமணிநேரம் ஓடிக்கொண்டிருந்த கடிகாரத்தை சிலநொடி நிறுத்தி வைப்பது போன்றது

B] பலமணிநேரம் ஓடிக்கொண்டிருந்த இயந்திரத்தை சிலமணிநேரம் நிறுத்தி வைப்பது போன்றது

C] பலமணிநேரம் ஓடிக்கொண்டிருப்பவன் சிலமணிநேரம் ஓய்வெடுப்பது போன்றது

D] பாமணிநேரம் ஓடிக்கொண்டிருக்கும் இதயம் சிலநொடிகள் நிற்பது போன்றது

7) உழைத்தால் ஏற்பட்ட உடற்சோர்வு போக அண்ணா கூறியவற்றில் கீழ்க்கண்ட எது மட்டும் தவறான தேவை?

A] உண்டி

B] உறையுள்

C] களிப்பு

D] உறக்கம்

8) உள்ளத்தால் ஏற்பட்ட உள்ளச்சோர்வு போக கீழ்க்கண்ட எந்த இரண்டும் தேவை என அண்ணா கூறுகிறார்?

A] உண்டி, உறக்கம்

B] உறையுள், ஓய்வு

C] உறக்கம், களிப்பு

D] ஓய்வு, பொழுது போக்கு

9) பாட்டாளி ஓய்வு பெறுவது, சமூக நீதியில் ஒன்று; அது அடிப்படை நீதி என்று கூறியவர் யார்?

A] அறிஞர் அண்ணா

B] கவிமணி

C] நாமக்கல் கவிஞர்

D] பாரதிதாசன்

10) ஒரு சமூகத்தின் நிலையை அறிவாளரகள் கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் கொண்டு மதிப்பிடுகிறார்கள்?

A] வேலை நேரம், வேலையின் தன்மை

B] ஓய்வு நேரம், ஓய்வின் தன்மை

C] கல்வி நேரம், கல்வியின் தன்மை

D] உறக்க நேரம், வேலையின் தன்மை

11) ரோம் நாட்டவர்கள் ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிட்டனர்?

A] நாடகங்கள் பார்ப்பது

B] முரட்டுக் காளையுடன் போரிடுவது

C] மற்போர், வாட்போர் செய்வது

D] கோழிச்சண்டை, கரடிச்சண்டை

12) அறிவுச் செல்வத்தைப் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிட்டனர்?

A] கோழிச் சண்டை, கரடிச்சண்டை

B] மற்போர், வாட்போர் செய்வது

C] ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீரவிளையாட்டு

D] காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்கள் காண்பது

13) ஸ்பெயின் நாட்டவர்கள் தன் ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை கீழ்க்கண்ட எதன் மூலம் செலவிட்டனர்?

A] முரட்டுக் காளையுடன் போரிடுவது

B] கோழிச் சண்டை, கரடிச்சண்டை நடத்துவது

C] ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீரவிளையாட்டு

D] மற்போர் மற்றும் வாட்போர் மற்றவருடன் போரிடுவது

14) பழந்தமிழர் தமது ஓய்வு நேரத்தை கீழ்க்கண்ட எவற்றில் அதிகமாக செலவிட்டனர்?

A] காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்கள் காண்பது

B] ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீரவிளையாட்டு

C] கோழிச் சண்டை, கரடிச்சண்டை நடத்துவது

D] மற்போர் மற்றும் வாட்போர் மற்றவருடன் போரிடுவது

15) இங்கிலாந்து நாட்டவர் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில் கீழ்க்கண்ட எவற்றில் ஓய்வுநேரத்தை செலவிட்டனர்?

A] காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்கள் காண்பது

B] ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீரவிளையாட்டு

C] கோழிச் சண்டை, கரடிச்சண்டை நடத்துவது

D] மற்போர் மற்றும் வாட்போர் மற்றவருடன் போரிடுவது

16) குத்துச்சண்டை கண்டு களிப்பதனை, எழுச்சி தரத்தக்க பொழுது போக்காகக் கொண்டுள்ள கீழ்க்கண்ட எந்த நாட்டில் இதற்கென பெரும்பணம் செலவிடப்பட்டு வருகிறது?

A] ஜப்பான்

B] பிரான்ஸ்

C] இத்தாலி

D] அமெரிக்கா

17) க்ளே என்ற குத்துச்சண்டை வீரன் தன்னுடன் போட்டிக்கு நின்ற கீழ்க்கண்ட எந்த வீரனை எதிர்த்து குத்துச்சண்டையில் வெற்றி பெற்றான்?

A] விஸ்டன்

B] லிஸ்டன்

C] திஸ்டன்

D] கிஸ்டன்

18) க்ளே மற்றும் விஸ்டன் இருவருமே____ஆவார்கள்?

A] அமெரிக்கர்கள்

B] நீக்ரோக்கள்

C] துருக்கியர்கள்

D] ஸ்பானியர்கள்

19) சோலையிலே புகுவேன்; மரங்கள் கூப்பிடும் - என்று பாடியவர் யார்?

A] கபிலர்

B] முடியரசன்

C] திரு.வி.க

D] கவிமணி

20) 'என்நிழல் நலஞ்செய்யும் என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா' - என்று கீழ்க்கண்ட எது கூப்பிடும் என்று திரு.வி.க கூறுகிறார்?

A] ஆலமரம்

B] விழுது

C] மலை

D] வேம்பு

21) மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உனையறிந்தோ தமிழை ஓதினேன் என்று சினந்து கூறியவன் யார்?

A] கம்பன்

B] காளமேகப்புலவர்

C] பரணர்

D] ஒட்டக்கூத்தர்

22) இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய இலக்கண வகையில் மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோர் உரைக்கப்பட்ட வகைகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது யாது?

A] ஒழுக்கம்

B] விழுப்பம்

C] வழக்கு

D] தண்டம்

விடைகள் - ஓய்வு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | D | 11 | C | 16 | D | 21 | A |
| 2 | B | 7 | C | 12 | D | 17 | A | 22 | B |
| 3 | C | 8 | D | 13 | A | 18 | B | | |
| 4 | D | 9 | A | 14 | B | 19 | C | | |
| 5 | A | 10 | B | 15 | C | 20 | D | | |

## 6) சமயங்களின் பொதுநீதி

1) நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக அழைக்கப்படுகிறது?

A] உழவு

B] சமயம்

C] சமைத்தல்

D] உயிர்கள்

2) மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளை நிலமாகத்தகுதிப்படுத்திப் பக்குவப் படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்கு______என்று பெயர்?

A] உழவு

B] சமயம்

C] சமைத்தல்

D] உயிர்கள்

3) சமயத்தின் நோக்கமாக கருதப்படுவது எது?

A] சமயத்தை மக்களிடயே பரப்புவது

B] சமயத்தை வெவ்வேறு இடங்களில் தொடங்குவது

C] மனித வாழ்க்கையை சமைத்து பக்குவப்படுத்துவது

D] மனித வாழ்க்கையில் சமயத்தை பரப்புவது

4) 'பாசப் பழிமுதல் பறிப்பார் போல' - என்று கூறியவர் யார்?

A] பரஞ்சோதி முனிவர்

B] சேரமான் பெருமாள் நாயனார்

C] திருஞானசம்பந்தர்

D] சேக்கிழார் பெருமான்

5) இன்பத்தினை தந்து வாழ வைக்கும் குணங்களில் மிக மிக சிறந்த குணம் எது?

A] அன்பு

B] கல்வி

C] நட்பு

D] செல்வம்

6) கீழ்க்கண்டவற்றில் எது துன்ப நோய்க்கு மருந்தாகவும், இன்ப விளைவுக்கு ஊற்றுக் கண்ணாகவும் விளங்குகிறது?

A] செல்வம்

B] அன்பு

C] உழவு

D] கல்வி

7) உலகின் பாவத்தைத் தமது செந்நீரால் கழுவியவர் யார்?

A] விஷ்ணு

B] நபிகள் நாயகம்

C] இயேசு பிரான்

D] புத்தர் பிரான்

8) ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுகங்கள்; பகைமை பாராட்டாதீர்கள்; மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள்; எல்லோருக்கும் எப்பொழுதும் அன்பு காட்டுங்கள்; - என்று வையகத்தை வழி நடத்தியவர் யார்?

A] மகாவீரர்

B] நபிகள் நாயகம்

C] புத்தர்பிரான்

D] இயேசுபிரான்

9) ‘கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் மீது கருணை பொழியப்படும்’ - என்பது கீழ்க்கண்ட எந்த நூலின் அறவுரை ஆகும்?

A] விவிலியம்

B] பாரதம்

C] பகவத்கீதை

D] திருக்குரான்

10) ‘இறைவா நான் அன்பு விதையை விதைப்பேனாக!, என்றும் மக்கள் என்னிடம் அன்பு செலுத்துவதற்கு முன், நான் அவர்களிடம் அன்பு காட்டுவேனாக’ - என்று கூறியவர் யார்?

A] இயேசுபிரான்

B] அர்ச் ஃபிரான்ஸிஸ்

C] முகமது சாகேபின்

D] மகாவீரர்

11) ‘பிறர் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்குப் பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா’ - என்பது கீழ்க்கண்ட யாருடைய அருள்வாக்கு?

A] புனித குர்ஆன்

B] அர்ச் ஃபிரான்சிஸ்

C] முகமது சகேபின்

D] இயேசுபிரான்

12) மாந்தர் குலம் ஒன்றே என்பதும் அவர்கள் அனைவரும் ஒரு குலமாக வாழக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பது கீழ்க்கண்ட எவற்றின் உபதேசம் என்று கூறப்படுகிறது?

A] பகவத்கீதை

B] விவிலியம்

C] இலியட்

D] புனிதகுரான்

13) இசுலாமிய மதத்தின் இணையற்ற கொள்கை எது?

A] உலகத்தில் யாரால் அதிக இன்பம் கிடைக்கிறதோ அவர்களையே அதிகமாக நேசிக்கிறார்

B] அல்லா மிகுந்த தயையுள்ளவர்; கருணைக்கடல்; கிருஆ சமுத்திரம்; பரம தயாளு

C] கடவுள் படைப்பில் அனைவரின் இன்பத்துன்பங்களையும் தனதாக கருதுகிறானோ அவன் ஸூபி

D] மக்கள் அன்பு செலுத்துவதற்கு முன் அவர்களிடம் நான் அன்பு செலுத்துவேன்

14) ஆசியாவில் பாரதத்திற்கு இணையான ஆன்மீக வளமிக்க ஞானிகள் பிறந்த நிலம் எது?

A] நேபாளம்

B] சீன நாடு

C] தாய்லாந்து

D] இத்தாலி

15) சீன தேசத்தில் கீழ்க்கண்ட எந்த ஞானி பல நூற்றாண்டுகள் ஒரு சமய ஞானியாக பாராட்டப்பட்டார்?

A] கான்சிஸ்பர்

B] முகமது சகேபின்

C] கன்பூஷீயஸ்

D] நிம்பந்தஸீட்

16) கீழ்க்கண்டவற்றில் எது வாழ்க்கையின் மூலத்தத்துவம் என்று கன்பூஷீயஸ் கூறுகிறார்?

A] செல்வம்

B] கல்வி

C] உழவு

D] அன்பு

17) ‘உனக்கு பிடிக்காத ஒன்றை, நீ பிறக்குப் பிடிக்குமென்று நினைந்து செய்யாதே!’ - என்று கூறியவர் யார்?

A] முகமது சகேபின்

B] அர்ச் ஃபிரான்சிஸ்

C] கன்பூஷீயஸ்

D] வர்ஜீஸ்

18) சுன்ஜீ - என்பது கன்பூஷியஸ் கூறிய ஐந்து நற்குணங்களுள் எத்தனையாவது நற்குணம் ஆகும்?

A] ஐந்தாவது நற்குணம்

B] முதலாவது நற்குணம்

C] மூன்றாவது நற்குணம்

D] இரண்டாவது நற்குணம்

19) தாய் தன் உயிர்க்கு ஆபத்து வருவதையும் கருதாது, தன் ஒரே பிள்ளையைப் பாதுகாப்பது போல மனிதன் எல்லா உயிர்களுடமும் எல்லையற்ற அன்பு கொண்டிருக்க வேண்டும் என்றும் தங்கு தடையின்றி பகையோ விரோதமோ இல்லாமல் மனிதர் தமக்கு மேலும் கீழும், அங்கும் இங்கும், அகில உலகினிடம் எல்லையற்ற அன்பு கொண்டு வாழ வேண்டும் என்று புத்த சமய வேதமாகிய எந்த வேதம் பெருமையுடன் கூறுகிறது?

A] பீடகம்

B] விபாஷங்கள்

C] ஹீனாயினம்

D] மகாயானம்

20) தயையே தர்மத்தின் வேர் - என்று கூறிய சமயம் எது?

A] இந்து சமயத்தின் புராணங்கள்

B] சமண சமயத்தின் புராணங்கள்

C] பௌத்த சமயத்தின் புராணங்கள்

D] கிறித்துவ சமயத்தின் புராணங்கள்

21) தர்மத்தின் இறுதி எல்லையாயிருப்பது கருணை என்று கூறியவர் யார்?

A] மகாவீரர்

B] பர்சவநாதர்

C] ஜினேந்திர தேவன்

D] நாகர்ஜீனா

22) பகைவனோ நண்பனோ விரோதியோ வேண்டியவனோ எல்லா உயிர்களையும் எல்லா மனிதர்களையும் ஒன்றுபோல் மதித்து எல்லோரையும் தாமாகக் கருதுதலே அகிம்சை என்று கூறியவர் யார்?

A] ஜினேந்திர தேவன்

B] பர்சவநாதர்

C] பத்ரபாகு

D] மகாவீரர்

23) இந்து வேதங்களுள் மிகவும் பழமையாகிய வேதம் எது?

A] ரிக் வேதம்

B] யஜீர் வேதம்

C] சாம வேதம்

D] அதர்வண வேதம்

24) எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக, அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவுட்டும், நீங்கள் எல்லோரும் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொண்டு வாழ்வீர்களாக - என்று கீழ்க்கண்ட எந்த வேதமானது வழிநடத்திகிறது?

A] சாம வேதம்

B] ரிக் வேதம்

C] யஜீர் வேதம்

D] அதர்வண வேதம்

25) தமிழகத்தில் கீழ்க்கண்ட எந்த நெறியானது அன்பினையே எல்லாமாக எடுத்துக்காட்டியது?

A] சைவநெறி

B] சமணநெறி

C] சிவநெறி

D] அருகநெறி

26) பரம்பொருளை அன்பே! அன்பே! யென்று அழுது அரற்றினால் அடையலாம் என்றும் அன்போடு உருகி அகம் குழைந்தால் இறைவனை எளிதிற் பெற்று அனுபவிக்காலம் என குறிப்பிட்டவர் யார்?

A] சம்பந்தர்

B] நாவுக்கரசர்

C] சுந்தரர்

D] திருமூலர்

27) அன்பும் சிவமும் இரண்ரென்பர் அறிவிலார் - என்ற பாடலை பாடியவர் யார்?

A] திருமூலர்

B] திருஞானசம்பந்தர்

C] திருநாவுக்கரசர்

D] மாணிக்கவாசகர்

28) இறையின்பத்தை ஈரமுடையவர்களே அனுபவிக்க முடியும் என்று கூறியவர் யார்?

A] மாணிக்கவாசகர்

B] திருமூலர்

C] வாகிசீர்

D] இயற்பகைநாயனார்

29) சமய வாழ்க்கை நியதிகள், ஒழுக்கங்களெனத் கீழ்க்கண்ட எந்த நூல் வகுத்து உரைக்கும் செய்திகளாவன?

A] திருவாசகம்

B] திருக்கோவை

C] திருமந்திரம்

D] திருவருட்பா

30) திருமூலர் எடுத்துக் காட்டும் சமய வழிபட்ட கடமைகள் மொத்தம் எத்தனை?

A] இரண்டு

B] ஐந்து

C] மூன்று

D] நான்கு

31) திருமூலர் கூறிய கடமைகளில் எத்தனை கடமைகள் உயிரினங்கள் மாட்டு அன்பு செய்வதைக் கூறுகிறது?

A] மூன்று கடமைகள்

B] ஒரு கடமை

C] இரண்டு கடமைகள்

D] நான்கு கடமைகள்

32) திருமூலர் கூறிய கடமைகளில் எத்தனை கடமைகளில் கடவுளுக்கு செய்யும் வழிபாட்டைக் கூறப்படுகிறது?

A] மூன்று கடமைகள்

B] ஒரு கடமை

C] நான்கு கடமைகள்

D] இரண்டு கடமைகள்

33) கீழ்க்கண்ட யார் தெளிவாக உறுதியாக எவ்வுயிர்க்கும் அன்பாக இருப்பதே ஈசனுக்கு அன்பாகும் என்று கூறினார்?

A] பரஞ்சோதி முனிவர்

B] கண்ணப்பர்

C] திருமூலர்

D] மாணிக்கவாசகர்

34) சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு எனத் திகழ்பவர் யார்?

A] திருமூலர்

B] சேக்கிழார்

C] சம்பந்தர்

D] அப்பரடிகள்

35) எல்லார் மாட்டும் அன்பு செய்யாதவர்கள் சமயச் சடங்குகளாகிய கங்கை, காவிரி முதலிய புண்ணிய ஆறுகளில் மூழ்கினாலும் உரிய பயனைப் பெறமுடியாது என்று கூறியவர் யார்?

A] மருள்நீக்கியார்

B] மாணிக்கவாசகர்

C] திருஞானசம்பந்தர்

D] சேக்கிழார்

36) நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு, வற்றினாலேயே திருவருட்புனல் பொங்கி வழியும் என்பது கீழ்க்கண்ட யாருடைய கருத்து?

A] திருமூலர்

B] தாண்டகவேந்தர்

C] பரஞ்சோதி முனிவர்

D] நக்கீரர்

37) தமிழ் மறைதந்த திருமூலர் பரம்பொருளாகிய சிவத்தை_____என்று குறிப்பிடுகிறார்?

A] உருவமற்றவன்

B] இறைவன்

C] அன்பு

D] அழிப்பவன்

## விடைகள் - சமயங்களின் பொதுநீதி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 9 | A | 17 | C | 25 | C | 33 | C |
| 2 | B | 10 | B | 18 | D | 26 | D | 34 | D |
| 3 | C | 11 | C | 19 | A | 27 | A | 35 | A |
| 4 | D | 12 | D | 20 | B | 28 | B | 36 | B |
| 5 | A | 13 | A | 21 | C | 29 | C | 37 | C |
| 6 | B | 14 | B | 22 | D | 30 | D | | |
| 7 | C | 15 | C | 23 | A | 31 | A | | |
| 8 | D | 16 | D | 24 | B | 32 | B | | |

## 7) கல்வெட்டுகள்

1) கோவில் பிரகாரத்தைச் சுற்றிவரும்போது கருங்கற் சுவர்களின் மேன் வரிசை வரிசையாக சிற்றுளி கொண்டு கல்தச்சர்களால் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள்_____எனப்படுகின்றன?

A] கல்வெட்டுகள்

B] கருப்பு எழுத்துக்கள்

C] வேதங்கள்

D] புராணங்கள்

2) கல்வெட்டுகளின் வேறு பெயர் யாது?

A] கற்சிலைகள்

B] சிலாசாசனங்கள்

C] சிலாசானங்கள்

D] கருவறை எழுத்துக்கள்

3) கோவில் உள்ள கீழ்க்கண்ட எவற்றை தேவர்கள் தம் தெய்வ மொழியில் முற்காலத்தில் வரைந்து வைத்தவையாதல் வேண்டும் என்று மக்கள் கூறி வந்தனர்?

A] கருவறை

B] கோவில் மாடம்

C] கல்வெட்டுகள்

D] கற்சிலைகள்

4) முற்காலத்தில் கல்வெட்டுகளில் இருந்த மொழி நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்திய மேல்நாட்டு பேரறிஞர்களில் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்கவர்களில் தவறானவர் யார்?

A] இராபர்ட் சிவெல்

B] டாக்டர்.ஷீல்ட்ஸ்

C] டாக்டர்.கீலஹார்ன்

D] டாக்டர்.கர்னல்

5) கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டிற்கு பிறகுதான் இந்திய அரசாங்கனத்திரும் கல்வெட்டிலாகவும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகவும் நிறுவி பழைய வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடுமாறு செய்தனர்?

A] பத்தொன்பதாம் நூற்றாண்டு

B] பதினெட்டாம் நூற்றாண்டு

C] பதினேழாம் நூற்றாண்டு

D] பதினாறாம் நூற்றாண்ட

6) பகைவர் முன்னின்று ஆற்றலோடு போர்புரிந்து உயிர் துறந்த வீரர்களை நினைவு கூர்தற் பொருட்டு அவர்கள் இறந்த இடங்களிலாதல் கீழ்க்கண்ட எதை அமைத்து விழா நடத்தி பாராட்டி வந்தனர்?

A] கற்சிலை

B] நடுகல்

C] மெய்ப்பாடு

D] கற்தூண்

7) முற்காலத்தில் தமிழ் மக்கள் நடுகல் வணங்கும் வழக்க முறை கொண்டிருந்ததை கூறும் நூல் எது?

A] சங்க இலக்கியம்

B] பதிற்றுப்பத்து

C] தொல்காப்பியம்

D] அகத்தியம்

8) நடுகல் அமைக்கும் முறையானது தொல்காப்பிய நூலில் கீழ்க்கண்ட எந்த திணை மூலம் கூறப்பட்டுள்ளது?

A] கரந்தை திணை

B] வஞ்சித் திணை

C] பாடாண் திணை

D] வெட்சித் திணை

9) நடுகல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த வீரரின் கீழ்க்கண்ட எந்த இரண்டும் வரையப்படும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது?

A] பெயரும், ஊரும்

B] வயதும், போர் குணமும்

C] பெயரும், பெருமையும்

D] பதவியும், பெயரும்

10) 'நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] மலைபடுகடாம்

B] புறநானூறு

C] நாலடியார்

D] மனுமுறைகண்ட வாசகம்

11) பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி நட்ட கல்லும் மூதூர் நத்தமும் - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] மலைபடுகடாம்

B] திருவாரூர் மும்மணிக்கோவை

C] திருவாரூர் நான்மணிமாலை

D] திருச்சிற்றம்பலக்கோவை

12) பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்?

A] சுந்தரமூர்த்தி நாயனார்

B] குலசேகர ஆழ்வார்

C] சேரமான் பெருமாள் நாயனார்

D] நாதமுனிகள்

13) சேரமான் பெருமாள் நாயனார் கீழ்க்கண்ட யாருடைய உற்ற நண்பர் என்று கூறப்படுகிறார்?

A] திருமழிசை ஆழ்வார்

B] நம்மாழ்வார்

C] அப்பரடிகள்

D] சுந்தரமூர்த்தி நாயனார்

14) கீழ்க்கண்ட யாருடைய கல்வெட்டுகளை மலைப்பாறைகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் பார்க்கலாம்?

A] சமணர்கள்

B] பௌத்தர்கள்

C] சைவர்கள்

D] வைணவர்கள்

15) சமணர்களின் கல்வெட்டுகளை கொண்ட திருநாதர் குன்று அமைந்துள்ள இடம் எது?

A] திருநெல்வேலி

B] செஞ்சி

C] திருச்சிராப்பள்ளி

D] திருவாரூர்

16) ஆனைமலை கல்வெட்டானது தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] மதுரை

B] திருச்சிராப்பள்ளி

C] திருநெல்வேலி

D] திருவண்ணாமலை

17) கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிய நம் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட யார் ஆட்சி புரிந்த காலத்தில் முதலில் கோயில்கள் அமைத்தனர்?

A] சேரர்

B] சோழர்

C] பாண்டியர்

D] பல்லவர்கள்

18) சோழ மன்னர்கள் கீழ்க்கண்ட எந்த சமயத்தில் ஈடுபாடுடையவர்களாய் இருந்ததால் தமிழகத்தில் அதிக கருங்கோவில்களை எழுப்பி புகழ் பெற்றனர்?

A] சைவசமயம்

B] வைணவசமயம்

C] சமணசமயம்

D] பௌத்தசமயம்

19) பொதுவாக கல்வெட்டுகளை பார்க்கும் போது முதலில் கீழ்க்கண்ட எந்த மங்கல வாசகம் இடம்பெற்றிருக்கும்?

A] நமஸ்தே நமக

B] ஸ்வஸ்திஸ்ரீ

C] பன்மாகேஸ்வர ரஷை

D] ஸ்ரீ வைஷ்ணவரஷை

20) கல்வெட்டுகளின் இறுதியில் இது பன்மாகேஸ்வர ரஷை; அறமறவற்க; அறமல்லது துணையில்லை - எனக் கூறப்படுவது கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக அழைக்கப்படுகிறது?

A] மங்கல வாசகம்

B] காலக்குறிப்பு

C] ஓம்படைக்கிளவிகள்

D] கல்வெட்டுச் செய்திகள்

21) முதன் முதலில் மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும் முறையானது கீழ்க்கண்ட எந்த அரசனால் தொடங்கப்பட்டது?

A] முதலாம் இராசேந்திர சோழன்

B] முதலாம் ஆதித்த சோழன்

C] இராசமகேந்திர சோழன்

D] முதலாம் இராஜராஜ சோழன்

22) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது முதன் முதலில் மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சி ஆளும் முறையானது தொடங்கப்பட்டது?

A] கி.பி. 893

B] கி.பி. 895

C] கி.பி. 898

D] கி.பி. 892

விடைகள் - கல்வெட்டுகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | B | 11 | B | 16 | C | 21 | C |
| 2 | B | 7 | C | 12 | C | 17 | D | 22 | D |
| 3 | C | 8 | D | 13 | D | 18 | A | | |
| 4 | D | 9 | C | 14 | A | 19 | B | | |
| 5 | A | 10 | A | 15 | B | 20 | C | | |

## 8) தமிழக மகளிர்

1) கணவன் மனைவி என்ற இருவரின் தொடர்பை வள்ளலார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த குறள் மூலம் விளக்குகிறார்?

A] உடம்பொ டுயிரிடை யன்ன மற்றன்ன

B] பேராண்மை யென்ப தறுகண் ஒன்றுற்றக்கால்

C] கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர்நிற்கும்

D] கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு

2) கணவனை இழந்த மனைவியின் வாழ்க்கை வறண்டு விடுவதைக் கூறும் 'நீரின் றமையா வுலகம் போலத்' - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] திருக்குறள்

B] நற்றிணை

C] நாலடியார்

D] புறநானூறு

3) செல்வம் கொழிக்கும் அரசியின் வாழ்வும் கணவனிறக்க வறண்டுவிடுவதை கூறும் 'கணவனை யிழந்தோர்க்கு காட்டுவ தில்லென்று' - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] நற்றிணை

B] புறநானூறு

C] சிலப்பதிகாரம்

D] மணிமேகலை

4) கீழ்க்கண்ட எந்த மன்னரின் மனைவி அறிஞர்கள் தடுத்தும் உடன் கட்டையேறத் துணிந்தார்?

A] சேரன் செங்குட்டுவனின் மனைவி

B] சோழன் நல்லுருத்திரனின் மனைவி

C] பாண்டியன் நெடுஞ்செழியலாதனின் மனைவி

D] பாண்டியன் பூதப்பாண்டியனின் மனைவி

5) கீழ்க்கண்ட எந்த நூலில் மனைவி தான் சமைத்ததை இனிது! இனிது! இனிது! எனக் கணவன் சுவைத்துண்பதைக் கண்டு அம்மகள் மட்டிலா மகிழ்ச்சியடையும் செய்தியானது கூறப்பட்டுள்ளது?

A] குறுந்தொகை

B] புறநானூறு

C] கலித்தொகை

D] பரிபாடல்

6) பெருஞ்சித்திரானாரின் மனைவியின் மகன் இயற்கை உணவின்மை காரணமாக செயற்கை உணவாகிய சோற்றினை நாடிச்சென்ற அக்குழந்தை வெற்றுக் கலனை கண்டு பசியால் அழ, அவ்வழுகையை நி\ருத்த உன் தந்தை எப்படி கோபத்தில் சினங்குவார் காட்டு என்று நடைபெறும் காட்சியனாது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] குறுந்தொகை

B] புறநானூறு

C] கலித்தொகை

D] பரிபாடல்

7) செல்வக் குடியாதல் குழந்தை என்று பசியின்றி உண்ண மறுத்து காற்சிலம்பதிரத் தோட்டப்பந்தலின் முன்னும் பின்னுமாக ஓடியாடும் காட்சியானது இடம்பெற்றுள்ள நூல் எது?

A] ஐங்குறுநூறு

B] புறநானூறு

C] நாலடியார்

D] நற்றிணை

8) பிறப்போ ரன்ன வுடன் வயிற் றுள்ளும் - எனத் தொடங்கும் வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] பத்துப்பாட்டு

B] பரிபாடல்

C] புறநானூறு

D] கலித்தொகை

9) கீழ்க்கண்ட எந்த புலவர் விருந்தோம்பலானது வீட்டாராகிய தலைவன் தலைவியர்க்கு இடையில் ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாக கூறியவர் யார்?

A] வள்ளுவனார்

B] ஔவையார்

C] இறையனார்

D] தொல்காப்பியர்

10) தினைப்புனங்காத்த கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியும் மயங்கி உயங்கச் செய்தாள் என்ற செய்தியானது கீழ்க்கண்ட எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?

A] அகநானூறு

B] புறநானூறு

C] குறுந்தொகை

D] கலித்தொகை

11) சிறுவர் குளக்கரையிலுள்ள உயர்ந்த மரத்தின் உச்சியில் ஏறி நீரில் வீழ்ந்து குளத்தின் அடிவரை பாயிந்து அடிமண் கொண்டு கரை சேர்ந்து வெற்றி மகிழ்வர் என்ற செய்தியானது கீழ்க்கண்ட எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A] அகநானூறு

B] புறநானூறு

C] நாலடியார்

D] நற்றிணை

12) சிறுமியர் கீழ்க்கண்ட எந்த இடத்தில் பாவை விளையாட்டை விளையாடுவர்?

A] நதிக்கரைமணல்

B] கடற்கரைமணல்

C] ஆற்றங்கரைமணல்

D] குளக்கரைமணல்

13) சிறுமியர் கடற்கரையில் நண்டுகளைப் பிடித்தாட்டும் விளையாட்டின் பெயர் யாது?

A] பாவை விளையாட்டு

B] மணல் வீடு கட்டல்

C] கிள்ளிப்பறித்தல்

D] அலவன் ஆட்டு

14) சங்ககாலத்திய பெண்கள் வீட்டில் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனரென கீழ்க்கண்ட எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?

A] நெடுநெல்வாடை

B] மதுரைக்காஞ்சி

C] குற்றாலக்குறவஞ்சி

D] பெரும்பாணாற்றுப்படை

15) அம்பானது மார்பு வழிச் சென்று முதுகைத் துளைத்தாலும் அதை விழுப்புண்ணாக கருதாமல் புறப்பண்ணாகவே எண்ணி வடக்கிருந்து உயிர் துறந்த சேரன் பெருஞ்சேரலாதனின் பெருமையை பாடிய பெண்பாற்புலவர் யார்?

A] ஔவையார்

B] வெண்ணிகுயத்தியார்

C] கோப்பெருந்தேவி

D] வெள்ளிவீதியார்

16) திருமணத்திற்கு பிறகு எக்காரணத்தாலோ கணவனது பொருள்வளம் சுருங்கிவிடத் தந்தை கொடுத்தனுப்பிய கொழுஞ்சோற்றையும் கொள்ள விரும்பாது, தற்கொண்டான் வளத்திற்கேற்ப நாளுக்கு ஒரு வேளை உணவே உண்ணும் நிலை கண்டு செவிலித்தாய் அவளை பாராட்டும் நிகழ்ச்சியானது கீழ்க்கண்ட எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?

A] நாலடியார்

B] நான்மணிக்கடிகை

C] நற்றிணை

D] நளவென்பா

17) கீழ்க்கண்டவற்றில் யாருடைய அரிய வாழ்வானது தனி வாழ்க்கை தானாகவே அமைந்துவிட்ட கன்னிப் பெண்டிரும் தயங்காது தொண்டாற்ற முன்வரலாம் என்பதைக் காட்டுகிறது?

A] கண்ணகி

B] மாதவி

C] வெண்ணிகுயத்தியார்

D] மணிமேகலை

18) ஆடவரைப்போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதை கூறும் ‘அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்’ - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] மூதின்முல்லை

B] முதுமொழிக்காஞ்சி

C] முத்தொள்ளாயிரம்

D] அகநானூறு

19) வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொலியும் மகளிர் தமக்கு மனைவியராய் வாய்ப்பதையே பெரும் பேறாகக் கருதினர் ஆடவர் என்னும் கருத்தானது கீழ்க்கண்ட எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?

A] பரிபாடல்

B] குறுந்தொகை

C] புறநானூறு

D] பத்துப்பாட்டு

20) பழங்காலத்தில் சிறுவர் சிறுமியர் கீழ்க்கண்ட எந்த துறைகளில் சிறந்து விளங்கவில்லை என்று சங்கப்பாடல்கள் கூறுகின்றன?

A] ஓவியம் தீட்டல்

B] காவியம் புனைதல்

C] பாடல் இயற்றல்

D] ஆடல் பாடல்

21) கணவனும் தமையனும் களத்தில் இறக்க, மைந்தனைப் போர்க்கோலம் புனைவித்துப் போருக்கு அனுப்பிய தாயின் வீரமும், நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனி மகனும் போரிலிறக்க வருந்தாது, ஈன்றஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரம் ஆகியவை கீழ்க்கண்ட எந்த நூலில் கூறப்பட்டுள்ளன?

A] பரிபாடல்

B] கலித்தொகை

C] குறுந்தொகை

D] புறநானூறு

22) கீழ்க்கண்டவற்றில் யார் ஆடல், பாடல் திறன், கலைத் திறனுக்கோற் மலைச்சிகரம் எனக் கூறப்படுகிறார்?

A] மாதவி

B] மணிமேகலை

C] மாதிரி

D] கண்ணகி

## விடைகள் - தமிழக மகளிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | B | 11 | B | 16 | C | 21 | D |
| 2 | B | 7 | D | 12 | C | 17 | D | 22 | A |
| 3 | C | 8 | C | 13 | D | 18 | A | | |
| 4 | D | 9 | D | 14 | A | 19 | B | | |
| 5 | A | 10 | A | 15 | B | 20 | C | | |

## துணைப்பாடப்பகுதி

| நாடக நூல் | | எழுதியவர் |
|---|---|---|
| 1) ஒரு நாள் கழிந்தது | - | புதுமைப்பித்தன் |
| 2) தேங்காய்த் துண்டுகள் | - | டாக்டர் மு.வரதராசனார் |
| 3) மறுமணம் | - | விந்தன் |
| 4) செங்கமலமும் ஒரு சோப்பும் | - | சுந்தரராமசாமி |
| 5) ஒரு பிரமுகர் | - | ஜெயகாந்தன் |
| 6) மண்ணின் மகன் | - | நீல.பத்மநாபன் |
| 7) அனுமதி | - | சுஜதா |
| 8) விழிப்பு | - | சிவசங்கரி |
| 9) அனந்தசயனம் காலனி | - | தோப்பில் முஹம்மது மீரான் |
| 10) கரையும் உருவங்கள் | - | வண்ணநிலவன் |

நன்றி

கோ.பழனி முருகன்